**+2 வணிகவியல் 2ம் திருப்பத் தேர்வு பிப் - 26**
**சரியான விடை**

1. (இ) வேலைப்பகிர்வு
2. (இ) குறியிலக்கு மேலாண்மை
3. (இ) புதியவெளியீடுக்கான சந்தை
4. (இ) வணிக இரசீது சந்தை
5. (அ) காளை
6. (அ) 1988
7. (அ) சரியான வேலைக்கு சரியான நபர்
8. (ஆ) எதிர்மறை
9. (இ) பண்டமாற்று முறை
10. (ஆ) நடவடிக்கை தரகர்
11. (இ) 15.04.1987
12. (அ) மாவட்ட நீதிபதி
13. (ஆ) உட்புற மற்றும் வெளிப்புற சூழல்
14. (இ) தாராளமயமாக்கல்
15. (இ) பொருளின் மீதான உரிமை பாத்தியம் வைத்திருப்பவர்
16. (இ) காசோலை
17. (ஆ) தோற்றுவிப்பாளர்
18. (இ) டிஜிட்டல் இந்தியா
19. (இ) நிறுமத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம்
20. (இ) பகராள்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மை:** முன் கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது – ஹென்றி.ஃ.போயல்

**22. உடனடிச் சந்தை:** ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும். தீர்வு உடனடியாக நடைபெறுகின்றது.

**23. செபி:** மூலதனச் சந்தையை ஒழுங்குப்படுத்தவும் மற்றும் கட்டுப்படுத்தவும் இந்தியாவில் 1992 பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட உயர் அமைப்பு இந்திய பத்திர மற்றும் மாற்றங்களின் வாரியம் (செபி) ஆகும்.

**24. பணியமர்த்தல்: டேல்யோடர்** கூற்றுப்படி பணியமர்த்தல் என்பது முடிவு செய்யப்பட்ட பணியினை ஏற்றுக் கொண்ட விண்ணப்பதாரருக்கு செய்ய வேண்டிய பணியினை ஒதுக்குவதாகும்.

**25. சமூகச் சந்தையிடுகை:** சமூக நலனை உறுதிப்படுத்தும் வகையில் சமூகத்தில் குறிப்பிட்ட பழக்கவழக்கங்களையும், நோக்கங்களையும் வெளிப்படுத்தும் வகையில் பொருள்களை சந்தைப்படுத்தும் முறையை சமூக சந்தைப்படுத்தல் எனப்படும்.

**26. வேளாண் தொழில் முனைவோர்:** வேளாண் பொருட்களை விளைவித்து நேரடியாகவோ அல்லது கூட்டுறவு அமைப்புகள் மூலமாகவும் சந்தையிடும் பணியை மேற்கொள்பவர் ஆவர்.

**27. VUCA –** விரைவான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக வணிகத்தின் எதிர்கால சூழலை சுருக்கமாக ஏற்ற இறக்கம், நிச்சயமற்ற தன்மை சிக்கலான தன்மை மற்றும் தெளிவற்றத் தன்மை கொண்டவை என்று **VUCA** – ஐ கூறலாம்

**28. செயலர் என்பவர் யார்?** நிறுமச் சட்டம் 2013, பிரிவு 2 (24)ன் படி நிறுமச் செயலர் என்பவர் ஒரு நிறுமத்தின் அமைச்சராக (அ) நிர்வாக பணிகளை செய்து முடிக்க தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ள ஒரு தனிநபரை நிறுமச் செயலர் எனலாம்.

**29. வருநிகழ்வுசார் சரக்கு:** இது ஒரு வகை எதிர்கால சரக்கு ஆகும். இது விற்பவர் கைவசம் வந்து சேர்வது, எதிர்காலத்தில் நடக்கும், நிகழ்ச்சியைப் பொறுத்தது.

**30. கலப்படம்:-** உணவுப் பொருட்களில் உடலுக்கு கேடு செய்யும் பொருட்களை இலாபத்துக்கு ஆசைப்பட்டு கலப்படம் செய்கின்றனர்.

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. மேலாண்மையின் முதன்மைப் பணிகளை பட்டியலிடுக.** திட்டமிடல், அமைப்பாற்றல், பணியமர்த்தல், இயக்குவித்தல், செயலூக்கமளித்தல், கட்டுப்படுத்துதல், ஒருங்கிணைத்தல்.

**32. எழுந்திரு இந்தியா(ஸ்டாட்டப் இந்தியா):** தொடக்க நிலையில் உள்ள தொழில்கட்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது, போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்வதாகும். இது 2016ம் ஆண்டு சனவரியில் துவங்கியது. நிதிகளின் நிதியின் மூலம் நிதி வசதி அளிக்கிறது.

**33. கருவூல இரசீதின் வகைகளை விவரி**

91 நாட்கள் கருவூல ரசீதுகள் 4 சதவீத தள்ளுபடியில் வெளியிடுதல்,

182 நாட்கள் கருவூல ரசீதுகள் - ஒரு வாரம் முழுவதும் வடிகட்டும் அடிப்படையில் வெளியிடுதல்,

364 நாட்கள் கருவூல இரசீதுகள் - நிலையான தள்ளுபடி இல்லை.

**34. காளை:-** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் மனப்பாங்கு கொண்டவர்.

**கரடி:-** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். கரடி அல்லது மண்டிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

**35. ஆட்சேர்ப்பு முறையில் கோரப்பாடாத விண்ணப்பங்கள்:** நிறுவனங்கள் காலிப்பணியிடங்கள் குறித்த எவ்வித அறிவிப்பும் செய்யாத நிலையில் வேலை தேடுவோர் தன்னிச்சையாக வேலைவேண்டி விண்ணப்பித்த விண்ணப்பங்களை கோரப்படாத விண்ணப்பங்கள் ஆகும்.

**36. புதிய பொருளாதாரக் கொள்கை:** உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியத்தின் நிலைமைகளுக்கு இந்தியா உட்பட்டு மற்றும் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்கள் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தது. அவை. தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல். இவை டீபு என அழைக்கப்படுகிறது

**37. சமூக சந்தையிடுதலின் நோக்கங்கள்:** சமூக நலனை பாதுகாப்பதாகும். புகையிலை மது பொருட்களை பயன்படுத்துதல் சுற்றுப்புறம் மாசுபடுத்துதல் வரதட்சனை பெண் குழந்தை பாதுகாப்பு சாலை பாதுகாப்பு மற்றும் நெகிழிப் பைகள் உபயோகம் போன்றவற்றிற்கு எதிர்க்கும் நோக்கத்திலும் சமூகம் விரும்பத்தக்க மற்றும் உடல் நலனை பாதுகாக்கும் பொருள்களை சந்தையிடுவதை சமூக சந்தைப்படுத்தல் குறிக்கும் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் அல்லது பாதிக்கும் காரணிகளை நீக்கி தரமான வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் சந்தைப்படுத்துதலில் முக்கிய நோக்கம் ஆகும்

**38. மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகள்:** மாற்றுச்சீட்டு எழுத்து வடிவில் இருக்க வேண்டும். மாற்றுச்சீட்டை விடுநர் அல்லது எழுதுபவர் கையொப்பம்இடவேண்டும்.பணம் யாருக்கு செலுத்தப்படவேண்டும் என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**39. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள்**

தன்னார்வ நுகர்வோர் அமைப்பு என்பது நுகர்வோரின் உரிமை மற்றும் நலனை பாதுகாத்திட ஏற்படுத்தப்பட்ட அமைப்பைக் குறிக்கும்

**<u>நோக்கங்கள்:-</u>**

நுகர்வோர்விவகாரத்துறை என்றஅமைப்பை நுகர்வோர்நலநிதியைஏற்படுத்திஅதனைநிர்வகித்து வருகிறது.

இந்த துறையுனுடைய தலையாய நோக்கம் இந்தியாவில் உள்ள நுகர்வோரை பாதுகாக்க இந்த துறை நுகர்வோர் குறித்த விழிப்புணர்வை அகில இந்திய அளவில் பல்வேறு அமைப்புகளின் உதவியுடன் பெருக்கி வருகிறது.

நுகர்வோர் பாதுகாப்பு வழிகாட்டுவது மற்றும் ஆலோசனை வழங்குவது மற்றும் குறைகளை தலையீடு செய்து தீர்ப்பது.

தன்னார்வ நுகர்வோர் அமைப்பு நுகர்வோர் நல நிதியிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை ஆய்வு செய்யும் செயல் திட்டங்களுக்கு நிதி உதவி செய்கிறது.

தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளளின் தங்களின் செயல்பாடுகளை வெளிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். அரசு குடிமக்களிடம் கொண்டுள்ள தொடர்பினை இணையதளம் மூலமாக வெளிப்படையாக அறிவித்தல்.

**40. பல்வேறு வகையான முன்னுரிமைப் பங்குகள்:**

**மீள்தகு முன்னுரிமைபங்குகள்:-**ஒரு நிலையானகாலம் அல்லது தவணைநாள் முடிந்துபெறக்கூடிய பங்குகள்.

**மீள்தகா முன்னுரிமை பங்குகள்:-** நிறுமத்தை கலைக்கும் போது பெறக்கூடிய பங்குகள் ஆகும்.

**மாற்றக்கூடிய முன்னுரிமை பங்குகள்:-** ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் சாதாரண பங்குகளாக மாற்றக் கூடிய பங்குகள் ஆகும்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்கள்:**

**அறிவின் தொகுப்பு:-** தற்போது மேலாண்மை உயர் தனிச்சிறப்பு வாய்ந்த மேலாண்மைக் கோட்பாடு மற்றும் தத்துவத்தை உருவாக்கியுள்ளது.

**மேலாண்மைக் கருவிகள்:-** கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம் என மேலாண்மையின் கிளைகள் பெருகி விரிவடைந்துள்ளது.

**தனிப்பாடப் பிரிவுகள்:-** பல்வேறு பல்கலைக்கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் மேலாண்மைக் கல்வியை தனிப்பாடப் பிரிவாகப் அங்கீகரித்திருக்கின்றன.

**சிறப்பீடுபாடு:-** மேலாண்மை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் மேலாண்மை சிறப்புத் தொழிலாளர்களுக்கு சாதகமான அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மனப்பாங்கு தற்போது அதிகரித்து வருகின்றது.

**நடத்தை விதி:-** வாங்குவோர் ஜாக்கிரதை என்ற கோட்பாடு சந்தையில் நீண்டகாலம் நீடிக்காது. தற்போது வாங்குவோர் எச்சரிக்கை என்ற கோட்பாட்டிற்கு பதிலாக விற்பவர் ஜாக்கிரதை என்ற சந்தை நடைமுறைகளை தீர்மானிக்கிறது.

**41.ஆ.**

| அடிப்படை | மாற்றுச்சீட்டு | காசோலை |
|---|---|---|
| வரையப்படுவது | குறிப்பிட்ட நபர் மீது எழுதப்படும். | வங்கியர் மீது மட்டும் எழுதப்படும். |
| சலுகை நாள் | சலுகை நாட்கள் - மூன்று | சலுகை நாட்கள் இல்லை. |
| படிகள் | அந்நிய மாற்றுச்சீட்டு மூன்று படிகளில் தயாரிக்கப்படுகிறது. | எதுவும் இல்லை. |
| கீறல் | மாற்றுச்சீட்டை கீறலிட முடியாது. | காசோலையை கீறலிட முடியும். |
| வருவாய் தலை | வருவாய் தலை ஒட்ட வேண்டும். | வருவாய் தலை ஒட்ட வேண்டியதில்லை. |

**42.அ. மனித வளத்தின் சிறப்புயல்புகள்** உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.
பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.
மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியாது.
மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை.
மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டவை.

**42.ஆ. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ன் நோக்கங்கள் யாவை?**
நுகர்வோரின் உயிருக்கும் உடமைக்கும் ஊறுவிளைவிக்கும் பொருட்களை தடுத்தல்.
நுகர்வோர்களுக்கு பொருட்களின் உண்மையான தகவல்களை அளித்தல்.
நியாமற்ற வணிக நடைமுறைகளிலிருந்து நுகர்வோரை பாதுகாத்தல்.
நுகர்வோரின் உரிமைகள் கடமைகளை அறியச் செய்தல்.
நல்ல தரமான பொருட்களை சரியான விலைகளில் கிடைக்கச் செய்தல்.

**43.அ. பங்குச் சந்தை பணிகளை விவரி.**
**உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:-** ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.
**பத்திரங்கள் மதிப்பீடு:-** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.
**முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:-** பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.
**மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:-** மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.
**மூலதன உருவாக்கம்:-** ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது.

**43.ஆ. குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள்** மேலாளர்க்கு அமைப்பில் தங்களது பங்கை புரிந்து கொள்ள உதவுகிறது,
கீழ்நிலை ஊழியர்களும் இலக்கு அமைப்பில் ஈடுபடச் செய்கிறது.
செயல் திறன் முறையாக மதிப்பீடு செய்யப்படுகிறது.
அதிகாரப் பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.
ஒரு தொழிலாளியின் பொறுப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

**44.அ. விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக**
**இரு தரப்பினர்:-** விற்பனை ஒப்பந்தத்தில் வாங்குபவர் மற்றும் விற்பவர் உள்ளனர்.
**பொருளின் மீதான உரிமை மாற்றம்:-** விற்பவர் பொருளின் மீதான உரிமையை மறுபயன் பெற்றுக் கொண்டு மாற்றித் தர வேண்டும்.
**சரக்கு:-** அசையும் சொத்துக்கள் அனைத்தும் சரக்கு ஆகும். (எகா:-. பங்குகள், நற்பெயர்)
**விலை:-** பொருளின் விற்பனைக்கான மறுபயனே விலை ஆகும்.
**விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு:-** பொருட்களின் உரிமை உடனே மாற்றினால் அது விற்பனையாகும். பொருட்களின் உரிமையை எதிர்காலத்தில் மாற்றுவது விற்பனை உடன்பாடாகும்.

**44.ஆ.**

| அடிப்படை | ஆட்சேர்ப்பு | தேர்ந்தெடுத்தல் |
|---|---|---|
| அணுகுமுறை | நேர்மறையான ஓர் செயல்முறை | எதிர்மறையான ஓர் அணுகுமுறை |
| வரிசை | முதல் படி | இரண்டாம் படி |
| முறை | சிக்கனமான முறை | செலவு மிகுதியான முறை |
| செயல்முறை | மிகவும் எளிதானது | மிகவும் சிரமம் சிக்கலானது |
| காலம் | குறைவான காலம் போதுமானது | அதிக காலம் தேவைப்படும் |

**45.அ. பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?**

**முறையான (செம்மையான சந்தை):-** இவ்வகை சந்தையில் ஒரே தன்மைக் கொண்ட பண்டங்கள் மற்றும் பணிகளை ஒரே விதமான விலையில் கையாளப்படுகிறது.

**முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை:-** இவ்வகை சந்தை பல்வகைப் பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்டுள்ளது. ஒரே தன்மை மற்றும் விலை கொண்ட பொருட்கள் இச்சந்தையில் இடம் பெறாது.

**3. புவியியல் அடிப்படையில் சந்தை (அ). குடும்ப சந்தை** ஒரு குடும்பத்தில் அல்லது குடும்பத்தின் நெருங்கிய உறுப்பினர்களிடையே பண்டங்களையோ அல்லது பணிகளையோ பரிமாறிக்கொள்ளப்படும் வகையில் உள்ள சந்தையை குடும்ப சந்தை என அழைக்கப்படுகிறது

**(ஆ). உள்ளூர் சந்தை** உள்ளூரிலேயே வாங்குவோரும், விற்போரும் பங்கேற்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட பொருட்களுக்காக உள்ள ஒரு சந்தையை உள்ளூர் சந்தை என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய சந்தை ஒரு கிராமமாகவோ அல்லது நகரமாகவோ இருக்கலாம். இத்தகைய சந்தையில் எளிதில் அழுகக்கூடிய பொருட்களாகிய பால், பழங்கள், மீன், காய் மற்றும் கனிகள் போன்றவை அடங்கும் இத்தகைய பொருட்களுக்கான தேவை மிக குறுகிய ஒன்றாகும்.

**(இ) தேசிய சந்தை** இத்தகைய சந்தையில் பண்டங்கள் மற்றும் பணிகள் ஒரு நாட்டின் பல்வேறு மூலை முடுக்குகளிலும் கிடைக்கப்பெறும் வகையில் அமையப் பெற்ற சந்தையை தேசிய சந்தை எனலாம். மேலும் இன்றைய காலகட்டத்தில் இத்தகைய சந்தைகள் போக்குவரத்து வசதி மற்றும் துரித தகவல் தொடர்பு மூலம் இந்தியாவில் மேலும் விரிவுபடுத்தி அனைத்து பொருட்கள் கிடைக்கவும் வழிவகை செய்கிறது.

**(ஈ). பன்னாட்டு சந்தை அல்லது உலகளாவிய சந்தை** பண்டங்கள் மற்றும் பணிகளை பன்னாட்டு அளவில் சந்தையிடுகை செய்வதனை பன்னாட்டு சந்தை அல்லது உலகளாவிய சந்தை என அழைக்கப்படுகிறது. வாங்குவோர் மற்றும் விற்போர் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே சந்தையிடுகையில் ஈடுபடுவர்.

**45.ஆ. இயக்குனரின் பல்வேறு வகைகள்:**

**இந்திய குடியுரிமை இயக்குனர்:-** இயக்குனர் கடந்த ஆண்டு காலத்தில் குறைந்தது 182 நாட்கள் இந்தியாவில் தங்கியிருக்க வேண்டும்.

**பெண் இயக்குனர்:** ஒரு இயக்குனர் குழுவில் குறைந்த பட்சம் ஒரு பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்.

**மாற்று இயக்குனர்:-** ஒரு இயக்குனர் இந்தியாவில் குறைந்தது மூன்று மாதத்திற்கு மேல் இல்லையென்றால் அவருக்கு பதிலாக நியமிக்கப்படுபவர்.

**கூடுதல் இயக்குனர்:-** ஒரு தனிமனிதனை தேவைப்பட்டால் கூடுதல் இயக்குனராக நியமிக்கலாம்.

**நிழல் இயக்குனர்:-** இயக்குனர் குழுவில் இடம் பெறாத ஒருவர் ஆனால் நிறுமத்தை வழி நடத்த அதிகாரம் உள்ளவர்.

**46.அ. தாராளமயமாக்கலின் நன்மைகள்**

தாராளமயமாக்கலின் மூலம் வெளிநாட்டு முதலீடு அதிகரிக்கிறது.

அந்நிய செலவாணி மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அந்நியச் செலவாணியின் இருப்பை அதிகப்படுத்துகிறது.

ஒரு நாட்டின் அளவுக்கு அதிகமான உற்பத்திக்கும் நுகர்வுக்கும் வழிவகை செய்கிறது.

ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைகளை நீக்குவதன் மூலம் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கிறது.

உலகமயமாக்கலினால் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் வர்த்தக கடனின் அளவு குறைகிறது.

**குறைபாடுகள்:-** தாராளமயமாக்கலினால் சிலதொழிற்சாலைகள் மூடப்படுவதால் வேலையில்லாப்பிரச்சனை அதிகரிக்கிறது.

உள்நாட்டு உற்பத்தி தொழில்கள் பாதிக்கிறது.

ஒரு நாடு மற்ற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையை அதிகரிக்கிறது.

தாராளமயமாக்கலினால் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டும் அதிகப் பயன் கிடைக்கிறது. வளரும் நாடுகளின் பொருளாதாரம் பின்தங்கியே இருக்கிறது.

**46.ஆ.**

| அடிப்படை | தொழில் முனைவோர் | அகத்தொழில் முனைவோர் |
|---|---|---|
| சிந்தனை | தடையற்ற சிந்தனைவாதி | தன்னிச்சையான சிந்தனைவாதி |
| சார்புநிலை | தன்னிச்சையான நபர் | தொழில் முனைவோரை சார்ந்தது இருப்பவர் |
| நிதிதிரட்டல் | சொந்தமுயற்சியில் நிதியை திரட்ட வேண்டும் | நிதியை திரட்ட வேண்டிய பொறுப்பு இல்லை |
| வெகுமதி | இலாபத்தில் பங்கு உண்டு | ஊதியம் பெற வாய்ப்பு உண்டு |
| இடர்ஏற்றல் | இடரை கட்டாயம் ஏற்க வேண்டும் | இடரை ஏற்க வேண்டியதில்லை. |

**47.அ.**

| தன்மைகள் | பணச் சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை |
| வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை | பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் |
| பண மதிப்பு | ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்சமதிப்பு ரூ25 இலட்சம் | ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100 |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மைய வங்கி மற்றும் செபி |

**47.ஆ. நுகர்வோரின் பொறுப்புகள் யாவை?**

விற்பனை ஒப்பந்தப்படி பொருளுக்கான விலையை நுகர்வோர்கள் செலுத்த வேண்டும்.

விலை செலுத்தியவுடன் உரிய நேரத்தில் உரிய இடத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்வது நுகர்வோரின் பொறுப்பாகும்.

குறித்த நேரத்தில் நுகர்வோர் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கே அவரே பொறுப்பாகும்.

நுகர்வோர் வாங்கியப் பொருட்களை அதன் விதிமுறை செயல்முறைக்கேற்ப முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.

நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது விற்பனையாளரிடமிருந்து ரொக்க இரசீது பெற வேண்டும்.